

ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக முன்னாள் மாவட்டக் கழகப் பொறுப்பாளர், மொழிக் காவலர், கோவை மாவட்ட முன்னாள் அவைத் தலைவர் – (நினைவில் வாழும்) மிசா பி.எஸ். ஜானகிராமன் அவர்களின் துணைவியார் டி.சம்பூர்ணம் அவர்கள் கோவையில் மறைவெய்தினார். தகவலறிந்து இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச்செல்வன், கோவை சென்று அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். ஜானகிராமன் – சம்பூர்ணம் இணையரின் புதல்வர் ராஜசேகர் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் திருநாளூர் வடக்கு அரசு உயர்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.206.80 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக ஏழு வகுப்பறையுடன் கூடிய கட்டிடங்கள் கட்டுவதற்கான இடத்தை பார்வையிட்டு தேர்வு செய்தார்.

### திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழக இளைஞரணி – தொ.மு.ச. சுற்றுச்சூழல் அணி சார்பில்

# கழகப் பவள விழாவினை முன்னிட்டு, நலஉதவிகள் -பொதுக்கூட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு நலஉதவிகள் வழங்கி சிறப்புரை!

திருவண்ணாமலை, நவ. 22 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி,தொழிலாளர் முன்னேற்றச்சங்கம், சுற்றுச் சூழல் அணிகளின் சார்பில், கழகபவளவிழாவினைமுன்னிட்டு, திருவண்ணாமலை நகரில் மூன்று நாட்கள் பொதுமக்களுக்கு நலஉதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு, நலஉதவிகள் வழங்கி, பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை யாற்றுகிறார்.

நவம்பர் 23, 24, 25 சனி, ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய மூன்று நாட்கள் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி, தொழிலாளர் முன்னேற்றச்சங்கம்,சுற்றுச்சூழல் அணிகளின் சார்பில், கழக பவள விழாவினை முன்னிட்டு, திருவண்ணாமலை நகரில்பொதுமக்களுக்குநல உதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டங்கள் நடைபெறவுள்ளது.

23.11.2024 சனிக்கிழமை அன்று நடைபெறும் பவள விழாபொதுக்கூட்டத்திற்கு மாநில தொ.மு.ச., துணைத் தலைவர்க.சௌந்தரராசன் அவர்கள் தலைமை வகிக்கிறார்.

24.11.2024 ஞாயிற்றுக் கிழமைஅன்றுநடைபெறும் பவள விழா பொதுக்கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான சி.என்.அண்ணாதுரைதலைமைவகிக்கிறார்.

25.11.2024 திங்கட் கிழமைஅன்றுநடைபெறும் பவள விழா பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர்சு.விஜி(எ)விஜயராஜ் தலைமை வகிக்கிறார்.

பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு,பொதுப்பணித்துறை அமைச்சரும், கழகஉயர்நிலைசெயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு பொதுமக்களுக்கு நலஉதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

பொதுக்கூட்டத்தில்சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவர் அணிதுணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட அவைத்தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், பொறியாளர் அணி மாநில செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச்செயற்குழு உறுப்பினர் பொன். முத்து, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி,

கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி. சரவணன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள்பிரியாவிஜயரங்கன், விஜியலட்சுமி ரமேஷ், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன்,கழக செய்தித்தொடர்புஇணைச் செயலாளர்சிவ.ஜெயராஜ்,

மாவட்ட அமைப்பாளர்கள்டி.வி.எம்.நேரு,காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு. கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன்,பிரவீன் ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா,ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ். பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம் சரவணன், உ.நித்யா,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை,ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி,இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

பொதுக்குழுஉறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி. கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன்

பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு,ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், மாவட்ட இளைஞர் அணிதுணைஅமைப்பாளர்கள்சு.ராஜாங்கம், எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதிஷ்குமார், டி.திலீப்குமார்

நகரமன்றதலைவர் நிர்மலாவேல்மாறன், ஒன்றியக் குழு தலைவர்கள் கலைவாணிகலைமணி, பரிமளா கலையரசன், பூ.அய்யாகண்ணு,தமயந்திஏழுமலை, சாந்திபெருமாள், பேரூராட்சிதலைவர்கள்கோ.சரவணன், கௌரிநடராஜ், செல்வபாரதிமனோஜ்குமார்,

நகர நிர்வாகிகள் சி.சண்முகம், மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகாவிஜயராஜ், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு.எஸ்.பிரபு, ஹக்கிம்சேட் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சிஅமைப்பின்பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்துகொள்கின்றனர்.

### தமிழ்நாட்டில்

# பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்த ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ.21-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. 400க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மற்றும் 1000க்கும் மேற்பட்ட தனிநபர்களின் பங்களிப்புடன் ரூபாய். 464 கோடி மதிப்பில் 17,500 க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகள் பயன்பெறும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. பள்ளிக் கல்வித் துறை, அரசு செயலாளர், திருமதி எஸ்.மதுமதி, நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளியின் உறுப்பினர் செயலாளர், ஆர்.சுதன், இ.ஆ.ப. (ஓய்வு), மற்றும் யுனிசெஃப் இந்தியாவின் கல்வித் தலைவரான திருமதி சாதனா பாண்டே ஆகியோர் பங்கேற்றனர். கல்வி தரத்தை மேம்படுத்துவதற்காக NSNOP திட்ட த்தின் மூலம் கூட்டுறவுகளை ஏற்படுத்துவதை குறித்து அனைவரும் கலைந்துரையாடினர்.

தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறையின் நம்ம பள்ளி நம்ம ஊரு பள்ளி (NSNOP), யூனிசெஃப் இந்தியாவின் ஒத்துழைப்புடன், ‘பங்களிப்புகளை ஒருங்கிணைத்து அரசுப் பள்ளிகளிகளை மேம்படுத்த’ என்ற தலைப்பில் ரவுண்ட் டேபிள் டிஸ்கஷன் நடத்தியது. இந்த நிகழ்வு, தமிழ்நாடு அரசுப் பள்ளிகளை மேம்படுத்த மற்றும் பங்களிப்பதற்கான வாய்ப்புகள் மற்றும் சவால்களை ஆராய அரசுத் தலைவர்கள், பெரு நிறுவனங்களின் பிரதிநிதி கள் மற்றும் கல்வி நிபுணர்களை ஒன்றிணைத்தது. பல்வேறு பங்குதாரர்களின் நோக்கங்கள் மற்றும் விருப்பங்களை கருத்தில் கொண்டு தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையில் நிலையான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஆலோச னைகள் நடைபெற்றுள்ளது.

நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டம், முதலமைச்சர் அவர்களால் 2022ஆம் ஆண்டு டிசம்பர் 19 அன்று துவங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், பெரு நிறுவன ங்கள், வணிகங்கள், வங்கிகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் (NGOs), தனிநபர்கள் மற்றும் அரசு பள்ளியின் முன்னாள் மாணவர்கள் அரசுப் பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதற்காக பங்களிக்கலாம்.

இதுவரை 400க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மற்றும் 1000க்கும் மேற்பட்ட தனிநபர்களின் பங்களிப்புடன் மொத்தம் ரூபாய். 464 கோடி, 17,500 க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகள் பயன்பெறும் வகையில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் அரசுப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல், உயர் கல்விக்கான உதவித்தொகை, கழிப்பறைகள் மற்றும் பிற சுகாதார வசதிகள் (WASH Facilities), கூடுதல் வகுப்பறைகள், ஹைடெக் லேப்கள் மற்றும் ஸ்மார்ட் வகுப் பறைகள் கட்டுதல் போன்ற முக்கிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

யூனிசெஃப், NSNOP போன்ற திட்டத்தை பிற இந்திய மாநிலங்களிலும் அறிமுகப்படுத்துவதை பெரும் வாய்ப்பாக கருதுவதன் மூலம் NSNOPக்கான தனது ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளது.

இது சார்ந்து திருமதி சாதனா பாண்டே கூறியதாவது :-

“190 நாடுகளைக் கொண்ட எங்கள் உலகளாவிய தளத்தில் இந்த அரசுதனியார் கூட்டு முயற்சி மாடலின் அடிப்படை கூட்டாளராக இருந்து தமிழ் நாட்டின் இச்சிறந்த செயல்முறைகளை குறித்து பதிவுசெய்து பகிர்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.” என்றார்.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது :

“இனி வரும் நிலையான மற்றும் அர்த்தமுள்ள கூட்டு முயற்சிகளின் நிகழ்வு களுக்கு முன்னுதாரணமாக அமையட்டும் என்றும், மேலும் NSNOP மாடலை பல மாநிலங்கள் மற்றும் உலகளவில் முக்கிய மாதிரியாக கட்டமைக்க, யூனிசெஃப்பின் அளவிட முடியாத பங்களிப்புக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்” என்று கூறினார்.

உரையாடல்களை ஊக்குவிக்கவும், கூட்டு முயற்சிகளை வலுப்படுத்தவும், பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களை விரிவுபடுத்தவும் ஒரு முக்கிய செயல்பாடாக விளங்குகிறது. இதன் மூலம் தமிழ் நாட்டில் ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி மற்றும் வெற்றிக்கான வாய்ப்புகள் உறுதி செய்யப்படுகின்றன.

### அனைத்து அரசு பள்ளிகளிலும்

# ‘மகிழ் முற்றம்’ மாணவர்குழு அமைப்பு!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தகவல்!



சென்னை, நவ. 22 -

சென்னை, சூளைமேடு, ஜெய் கோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில்நடைபெற்ற விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி , மகிழ் முற்றம் கையேடு மற்றும் லோகோ ஆகியவற்றை வெளியிட்டார்.அதனைபள்ளிக்கல்வித்துறை அரசு செயலாளர் திருமதி.சோ.மதுமதி, பெற்றுக்கொண்டார்.இவ்விழாவிற்கு ஆயிரம் விளக்கு தொகுதிசட்டமன்றஉறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில்அமைச்சர்அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, துணை முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, பள்ளிக் கல்வித் துறை சார்பாக 2024-2025 ஆம் நிதி யாண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆளுமைத் திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகள் குறித்துதமிழ்நாடுசட்டமன்றப் பேரவையில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப் பட்டது.

“அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களிடையேதலைமைப்பண்பை வளர்க்கும் வகையில், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் பெயர்களில் மாணவர் குழுக்கள் அமைத்து, மாணவத்தலைவர்மற்றும்மாணவ அமைச்சர்கள் தெரிவு செய்யப்படுவர். இதன் மூலம் மாணவர்களிடையே அரசியல்அறிவுசார்ந்தஅனுபவங்கள்மற்றும்ஆளுமைத்திறன் மேம்பட, மாதிரி சட்டமன்றம் மற்றும் மாதிரி பாராளுமன்றம்நடத்தப்படும்.இதற்காக,தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். இத்திட்டம்ரூபாய்.2கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்”.

மேற்கண்ட அறிவிப்பின் படி, 2024 25 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துஅரசுப்பள்ளிகளிலும் “மகிழ் முற்றம்” மாணவர்குழு(HouseSystem)அமைப்பினை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் மாணவர்கள் குழுவாக இணைந்து செயல்படுதல், சமூக மனப்பான்மை, வேற்றுமைகள் இல்லாத பரஸ்பர ஆதரவு ஆகியவற்றை முதன்மை நோக்கங்களாககொண்டுள்ளது. பல்வேறு கல்வி மற்றும் கல்விசார் இணைச் செயல்பாடுகள் மூலம் சமூக உணர்வை ஊக்குவிப்பதற்கும்,குழுப்பணியைவளர்ப்பதற்கும், மாணவர் தலைமை பண்பை ஊக்குவிப்பதற்கும் ஏதுவாக வருகை, கற்றல் திறன். மன்றங்கள்மற்றும்கலைத்திருவிழாவில் மாணவர்களின் செயல்பாடுகள் மதிப்பீடு செய்யத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும்,பள்ளிஅளவில்இரு தனிச்செயல்பாடுகளைஆசிரியர்கள்தேர்வுசெய்துமதிப்பீடு செய்யலாம். எடுத்துகாட்டாகநேரம்தவறாமை, காலை வழிபாட்டு கூட்டத்தில்பங்கேற்றல்,வீட்டுப்பாடம் முடித்தல், தன்சுத்தம் பேணுதல் போன்ற செயல்பாடுகளை தெரிவு செய்யலாம். இதன் மூலம் இக்குழு அமைப்பு மாணவர்களிடையே விரும்பத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான தளமாக அமையும்.

மகிழ் முற்றம் திட்டச் செயலாக்கத்திற்கென கையேடு பள்ளிக் கல்வித் துறையால் வடிவமைக்கப் பட்டுள்ளது. இக்கையேட்டில்,வழங்கப்பட்டுள்ளவழிமுறைகளை பின்பற்றி 37,592 அரசுப் பள்ளிகளில் குழுக்கள் அமைக்கப்படும். உலககுழந்தைகள்தினமான நவம்பர்20அன்றுமாணவர்களுக்கான வளமான கல்வியை வழங்குவதற்கான ஒரு மைல் கல்லாக இத்திட்டம் செயல்படுத்தப்படும். இன்றுமகிழ்முற்றம்தலைவராகப் பொறுப்பேற்றுள்ள மாணவர்களுக்குவாழ்த்துக்களையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறுஅமைச்சர்அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறினார்.

இவ்விழாவில் பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர்.ச.கண்ணப்பன்,இணை இயக்குநர்கள் திருமதி.சசிகலா, வை.குமார்,சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் முனைவர். அ.புகழேந்தி, மாமன்ற உறுப்பினர், திருமதி. எலிசபெத் பாபு, ஆசிரியர்கள் மற்றும் மாணவியர்கள் கலந்து கொண்டனர்.



தர்மபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைபடி தீர்த்தமலையில் ஒன்றிய அவைத்தலைவர் எம்.ஜெய்னுலாப்தீன் தலைமையில் நடைபெற்ற கிழக்கு ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டத்தில் அரூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கோ.சந்திரமோகன் கலந்து கொண்டு கழக இளைஞர் அணி செயலாளர்,தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா,டிசம்பர் 6 ஆம் தேதி தர்மபுரி வருகை தரும் துணை முதலமைச்சர் அவர்களின் வரவேற்பு உள்ளிட்ட கழக பணிகள் குறித்து சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய கழக நிர்வாகிகள்,கிளை கழக செயலாளர்கள், BLA2 நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கோவை மாவட்ட முன்னாள் பொறுப்பாளர்

# பி.எஸ்.ஜானகிராமன் துணைவியார் டி.சம்பூர்ணம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



கோவை, நவ.22 -

ஒருங்கிணைந்த கோவை மாவட்ட முன்னாள் பொறுப்பாளர் பி.எஸ். ஜானகிராமன் அவர்களின் துணைவியார் நல்லாசிரியர் விருது பெற்ற டி.சம்பூர்ணம் அம்மையார் நேற்று முன்தினம் (20.11.2024) மாலை இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக முன்னாள் பொறுப்பாளரும் முன்னாள் அவைத் தலைவரும் மொழிக்காவலருமான மிசா. பி.எஸ். ஜானகிராமன் அவர்களின் துணைவியார் டி.சம்பூர்ணம் அம்மையார் அவர்கள் நேற்று முன்தினம் மாலை இயற்கையெய்தினார்.

அன்னாரது நல்லடக்கம் நேற்று (21-11-2024) மாலை 4 மணியளவில் கோவையில் நடைபெற்றது.

டி.சம்பூர்ணம் அம்மையார் மறைவுச் செய்தியறிந்ததும், கோவை மாவட்டக் கழக நிர்வாகிகளும் கழகத் தோழர்களும் அன்னாரது இல்லம் சென்று அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஓரத்தநாடு கு.வை.ஆண்டியப்பன்

நவம்பர் 22 (2012)



பகுத்தறிவு கொள்கைகள் கொண்ட நாடகங்களில் நடித்தன் மூலம் முத்தமிழறிஞர் கலைஞருக்கு அறிமுகமாகி, பின்னர் கழக் கொள்கைகளை பாடல்கள் மூலம் பிரச்சாரம் செய்தவர்.

ஓரத்தநாடு ஒன்றியக் கழகச் செயலாளராக இரண்டு முறையும் – ஒன்றிய அவைத் தலைவராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்தவர்.

தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநராகவும், ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் சிறை சென்றவர். குறிப்பாக, ‘மிசா’ கைதியாக சிறையில் இருந்தபோது தனக்கு பிறந்த ஆண் குழந்தைக்கு சிறைச்செல்வன் என்று பெயரிட்டு மகிழ்ந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.